தனி இதழ் ஓரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 135

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: T.D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: கார்த்திகை 4உ வியாழன் (19—11—53) ★ ★ ★ வெளியூர்: கார்த்திகை 5உ வெள்ளி (20—11—53)

ஆச்சாரியாரை எதிர்க்கும் காங்கிரசார் "ராகு கேது"க்களாம்!

"வௌவால்களாம்! ஆந்தைகளாம்! சுயநலமிகளாம்!

"அரசியல் பித்தலாட்டக்காரர்கள்" என அர்ச்சகர்களின் அர்ச்சனை!

சி. ஆர். இமயத்தின் உச்சியில் நிற்கும் சூரியனாம்!

'சு. மி.'-யில் ஒரு பக்தரின் பிரலாபம்!

"சூரியன், சந்திரன் இருவரும் அவ்வப்போது ராகு—கேது கிரகங்களினால் மறைக்கப்பட்டு, சில நிமிஷநேரத்துக்கு ஒளியிழந்து நிற்கின்றனர். ஆனால் மக்கள் "ஐயோ! சூரியன் ஒளி போய்விட்டதே! சந்திரன் அழகு மங்கி விட்டதே" என அழுது புலம்புவதில்லை.

இதே போன்ற நிலைமை, இன்று நம் சென்னை மாகாணத்தில் தோன்றியுள்ளது.

1942-ம் வருஷத்தில் பிடித்த பீடை சில காலம் இருந்து ஒழிந்தது. மீண்டும் சில ஆண்டுகள் சென்றதும் கிளம்பியிருக்கிறது.

இம்மாதிரி கிரகணம் பிடிப்பது அரசியலிலும் மற்றதிலும் தவிர்க்கமுடியாத பாபமாகவே கருதவேண்டியிருக்கிறது. ராஜாஜி தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் ஆற்றல் படைத்தவர், மாகாண முழுவதிலுமுள்ள நல்ல எண்ணம் படைத்த மக்களின் நல்லாசி கொண்ட பிரார்த்தனையில் உருவானவர்.

அரசியல் பித்தலாட்டக் காரர்களின் தயவினால் அவர் சோபைபெற்று விளங்கவில்லை. விருப்பு வெறுப்பற்ற தூய தன்மையில் 'கண்ணன் காட்டிய வழி' சென்று, மக்களுக்கு சேவை செய்வதன் மூலமே அவர் இமயத்தின் உச்சியில சூரியன் போன்று நின்று பிரகாசிக்கிறார்.

பரிதியின் ஒளியை விரும்பாத வௌவால்கள், ஆந்தைகள் முதலியவற்றையும் இறைவன் சிருஷ்டித்துக்கவில்லையா இருக்கிறான்? ஆயினும் கோடிக்கணக்கான பக்ஷி இனங்கள் சூரியன் வருகையை விரும்பி, அவன் ஒளியின் கிரணத்தால் உயிர்பெற்று சந்தோஷ வாழ்க்கை நடத்துகின்றன.

நம் நாடு குடியரசல்லவா? நாமே வகுத்துக்கொண்ட அரசியல் அமைப்பு அல்லவா? ஜனநாயகத்தின் பேரால் சுயநலமிகளும் வாழ இடமிருக்கிறதல்லவா?

வரம் தந்த ஈசன் தலையிலேயே கைவைக்க முயற்சித்த பண்புள்ள நாடல்லவா இது? ஆதலால் மீண்டும் சில சுயநலமிகள் சேர்ந்து, ராஜாஜியைக் கவிழ்க்க முயற்சிப்பதில ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. சிறிதளவாவது தங்கள் செல்வாக்கை உபயோகிக்க சந்தர்ப்பம் கிடைக்குமாவென பதினெட்டு மாதங்கள் காத்திருந்து ஏமாந்தவர்கள் வேறு என்னதான் செய்யமுடியும்?"

—இவ்வாறு, 'சுதேசமித்திரன்,' நவ. 18-ந் தேதி இதழில் 'அன்பர் தபால்' என்ற பகுதியில், சேலம் தோழர் அ. கிருஷ்ணன் என்பவர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கேவலம் '...க்தி!'

★

'ஓரளவுக்குக் கும்பல்... இருக்கத்தான் வேண்டும்... கேவலம், பக்தியை மட்டும் சினிமாப் படங்கள் சித்தரித்துக் காட்டவேண்டும் என்ற வைதீக வாதத்தை ஏற்க முடியாது. சுவாரசியமும் தேவை"

'பாரத தேவி' 18-11-53

தூத்துக்குடி வழக்கு நிதி

★

இதுவரை சேர்ந்துள்ளது

ரூ. 3298-7-5

சி. ஆர். கோபுரம் என்கிறது கோபுரந்தாங்கி!

'சண்டைபோடுகிறவர்களை காங்கிரசை விட்டு வெளியேற்ற வேண்டும்'

தூத்துக்குடி, நவ 18—

தூத்துக்குடி நகர காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக நேரு பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. விழாக் கூட்டத்திற்கு தோழர் சோமயாஜுலு தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நிதிமந்திரி சுப்பிரமணியம் கலந்துகொண்டு பேசியதாவது:—

"ஆச்சாரியார், பொதுவுடமைக் கட்சிக்காரர்களை இருக்கும் இடம்தெரியாமல் செய்துவிட்டார். இனி திராவிட நாட்டுக் கட்சிக்காரர்கள்தான் உள்ளனர்; இவர்கள், வெள்ளையர்களின் தாசர்கள்; காங்கிரஸ் கட்சியின் மேல் இவர்களுக்குப் பொறாமை; வெள்ளையர்கள் நம்மிடம் நாட்டை ஒப்படைக்கவில்லையே என்ற எரிச்சல் இருக்கிறது," என்றார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மந்திரி சபை ஒரு திட்டம் கொண்டுவந்தால், அது சரியா தப்பா, நீதியா, நேர்மையா

(8-ம் பக்கம் பார்க்க)

சி. ஆர்.-க்கு விடவேண்டிய சவாலை மற்றவர்க்கு விடும் மாமண்டைகள்!

மக்கள் ...ப்பம் பெறாத முதல்வருக்கு மூர்க்கர்களின் படை வரிசை

குடந்தை, நவ. 17—

"ராஜாஜி சர்க்காருக்... பதவியை ராஜினாமா... தேர்தலுக்கு நிற்கும்படி... உள்ள எம். எல். ஏ.-க்கள், தங்கள் தொகுதியில் மறு... ...டம் சவால் விடுகிறது."

—இவ்வாறு, பாபநாசம் தாலுகா... ...ச்சூர் பாரதி சேவா சங்கத்தில், நவ. 14-ந் தேதியன்று, தோ... கே. வெங்கட்ராமய்யர் தலைமையில் நடைபெற்ற நேரு பிறந்த ...வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"சென்னை மாநிலத்தில் அராஜகம் ஏற்படுமோ என்று அஞ்சிய நேரத்தில், தன்னாத வாறில், அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டு சர்க்காரை நடத்திவரும் ராஜாஜியையும், சர்க்காரையும் கவிழ்க்க சில காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள் செய்யும் முயற்சியைக் கண்டிப்பதாகவும், இவர்கள் செயல் காங்கிரசிற்கு இழுக்குத் தேடுவதை எனக் கருதப்படுவதாக"வும் மேலும் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கருணாநிதி வரவேற்புக் கூட்டத்தை டவுன் ஹாலில் நடத்த அனுமதி மறுப்பு

அரசியல் கட்சிகளுக்கு அதிகாரிகள் பாரபட்சம்

திருச்சி, நவ. 19—

திருச்சி டவுன்ஹால் மைதானத்தில் 21-ம் தேதி சிறை சென்று மீண்ட தோழர் கருணாநிதி அவர்களுக்கு வரவேற்பளிக்க அனுமதி கொடுக்க திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட் திரு ராதாகிருஷ்ணமேனன் அவர்கள் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார்.

சென்றவாரம் அதே இடத்தில் காங்கிரஸ் பொதுக்கூட்டத்திற்கு, அதற்கு முதல் வாரம் கம்யூனிஸ்டு பொதுக் கூட்டத்திற்கும் அனுமதி கொடுத்தார். [ந. கி.]

வழக்கை வாபஸ் பெற வலியுறுத்த எம். எல். ஏ.-க்களுக்கு வேண்டுகோள்

கோரிக்கையை ஆ. ரத்தினம், எம்.எல்.ஏ., ஏற்றுக்கொண்டார்

புதுப்பாளையம், நவ. 18—

8—11—53-ல் நடந்த இவ்வூர் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தூத்துக்குடி தோழர்கள் மீதுள்ள வழக்கை அரசாங்கம் வாபஸ் பெற்று, மேற்படி தோழர்களை விடுதலை செய்யக் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தின் நகல், கனம் முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது.

கடலூர் தொகுதி எம்.எல்.ஏ., எம். பி.-களுக்கு, வழக்கை வாபஸ் பெற முதலமைச்சரைக் கேட்டுக்கொள்ளுமாறு, தோழர்கள் எஸ். எஸ். இராமசாமி, எம். எல். ஏ., ஆ. ரத்தினம், எம்.எல்.ஏ., கோவிந்தசாமி, எம். பி., இளையபெருமாள், எம். பி., ஆகியவர்களை தபால்மூலம் எழுதிக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பு:—தோழர் ஆ. ரத்தினம், எம். எல். ஏ., அவர்களிடமிருந்து, "வழக்கை வாபஸ் பெற எழுதி இருப்பதாகவும், மேலும் அது சம்பந்தமாக பல கேள்விகளை அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாகவும்" பதில் வந்துள்ளது.

கண்டு 'பிடித்தால் பரிசு!

மதுவிலக்கு குற்றங்களைக் கண்டுபிடிக்கும் போலீஸ்காரர்களுக்குப் பணம் பரிசளிப்பது குறித்து, சென்னை சர்க்கார் யோசித்து வருகின்றனர்.

கலால் இலாகா போலீஸ் இலாகாவுடன், மதுவிலக்குக் குற்றங்களை இதுவரை கண்டுபிடித்து வந்திருக்கிறது. இனி ஜில்லா போலீஸ் சூப்பரின்டெண்டு மேற்பார்வையில் மதுவிலக்குக் குற்றங்கள் கண்டுபிடிக்கும் வேலை ஒப்படைக்கப்படலாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திருச்சி வரவேற்புக் கூட்டம்

★

21—11—53 சனி மாலை 6 மணிக்கு

திருச்சி டவுன் ஹால் முன்பாக நடைபெறும்

தலைவர்: ஏ. பி. தர்மலிங்கம்

பேச்சாளர்கள்: ஏ. கோவிந்தசாமி M.L.A., மு. கருணாநிதி, கண்ணதாசன், எம். எஸ். மணி

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஐவர் சிறையில்!
இன்று
80-வது நாள்

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 19—11—1953 வியாழன்

காமராஜர் தோல்வி!

சென்னை நகராட்சி மன்றத்தின் தலைவராகக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தோழர் பரமேஸ்வரன் அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார். தமமுடைய காலத்தில், நகரை, நரக நிலையிலிருந்து மாற்றி அமைத்துவிடப் போவதாக அவர் உறுதி கூறியிருக்கிறார். மன்றத் தலைவரானேன் என்ற வெற்றிக் களிப்பில் வெளியான வெறும் உபசார வார்த்தை இது, என்றுதான் கொள்ள வேண்டுமே யல்லாது, இதை, வேறு ஆழ்ந்த பொருளில் கொள்ளுவதற்கு இல்லையென்பது அனுபவ உண்மை.

எவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோதிலும், தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், ஒவ்வொருவரும் கூறும் நம்பிக்கையூட்டும் உற்சாகமான விஷயங்களை நகரமக்கள் கேட்டுக் கேட்டுத் தங்கள் காதும், கருத்தும் புளித்துப்போய் இருக்கின்றனர். குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டும் கதைபோல நகராட்சி மன்றத்தின் நிதி நிலையை வைத்துக்கொண்டு, அல்நாஷர் போல் மனக்கோட்டை கட்டுவது, காரியத்துக்கு உதவாது. ஓராண்டு முடிவில், பதவியைவிட்டு விலகும் முன்னுள் மேயருக்கு செலவு தந்து பேசும்போது, 'இருந்தாலும் ஆளும்', 'ஏதோ தம்மாலானதைச் செய்து முடித்திருக்கிறார் அவர் பதவி காலத்தில்' என்று அனைவரும் மனம் உடைந்துப் பாராட்டுவதையும் பொதுமக்கள் கேட்டுத்தான் இருக்கிறார்கள். எனவே, தோழர் பரமேஸ்வரன் கூறும் நம்பிக்கைப் பேச்சும், நல்ல நம்பிக்கை யளிக்கும் சொல்லாக எவரும் கொள்ளமாட்டார்கள். நிற்க,

மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தோழர் பரமேஸ்வரன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்பதை மறந்துவிடக் கூடாது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களே பெரும்பான்மை உறுப்பினர்களாக இருப்பதினால்தான் காங்கிரஸ்காரராகிய ஒருவர் மேயராகப் போட்டி[illegible] வர முடிந்தது.

இதுபோலத்தான் துணைத் தலைவ[illegible]ரு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக வ[illegible]ம் என்று அனைவரும் கருதுவர்.

தலைவரும், துணைத் த[illegible]ரு கட்சியினராக இருந்தாக வேண்டும் என்ற [illegible] இல்லை என்பதை நாமும் ஒப்புக் கொள்ளுகி[illegible], நகராட்சிக்கு, அரசியல் பாகுபாடுகள் இருக்கத் [illegible] இல்லை என்பதுதான் நமது அசைக்க முடியா[illegible] தலைவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரா[illegible], துணைத் தலைவர், கட்சிச் சார்பற்றவராக இருப்பதும் வரவேற்கத் தக்கது தான். ஆனால் எதற்கும் ஒரு ஒழுங்கு முறை வேண்டும் என்பதைத் தான் நாம் வலியுறுத்த ஆசைப்படுகிறோம்.

நகராட்சியில் அரசியல் கட்சிப் பாகுபாடுகளைப் புகுத்தக் கூடாது என்பது பெரும்பாலான மக்களின் விருப்பமாக இருந்தபோதிலும், வெறும் பகட்டிலேயே நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சிக்கு, இந்தக் கோட்பாடு பிடிக்கவில்லை நீண்ட காலமாகவே, நகராட்சி மன்றங்களில் தனது கட்சியின் ஆதிக்கம் இருக்கவேண்டும் என்று நகர மன்றங்களை வெறும் அரசியல் அங்காடியாக மாற்றிவிடும் பணியில் காங்கிரஸ் ஈடுபட்டு வந்திருக்கிறது. இந்த உண்மையை மெய்ப்பிக்க எடுத்துக் காட்டுகள் தேவை இல்லை.

சென்னை நகரசபை காங்கிரஸ் உறுப்பினர்களின் கூட்டம், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் தோழர் காமராஜர் அவர்கள் தலைமையில் ஒரு கிழமைக்கு முன்னதாக நடந்திருக்கிறது. தலைவராகவும், துணைத் தலைவராகவும், இந்த ஆண்டுக்கு யார் யாரைத் தேர்ந்தெடுப்பது என்று முடிவு கட்டுவதை முக்கியமாகக் கொண்டே கூட்டப்பட்டச் சிறப்புக் கூட்டமாகும் அது. அதில் தலைவராகப் பரமேஸ்வரன் அவர்களையும், துணைத் தலைவராக காங்கிரஸ் ஊழியர் தோழர் ராமதாஸ் அவர்களையும் தேர்ந்தெடுப்பது என முடிவு தீர்மானிக்கப்பட்டது.

துணைத் தலைவர் பதவிக்கு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குள்ளாகவே போட்டி இருந்தது. தோழர் ராமதாஸ் உட்பட ஐவர் துணைத் தலைவர் பதவிக்குப் போட்டி இட்டனர். 23 வாக்குகளை ஊழியர் ராமதாஸ் பெற்றார். எனவே, அவரையே துணைத் தலைவர் தேர்தலுக்கு நிறுத்துவது என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் முடிவுக்கு வந்தனர்.

தேர்தல் தேதியும் வந்தது. தோழர் பரமேஸ்வரன் பெயரை முன்மொழிந்த நகராட்சி மன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவரான தோழர் ராதாகிருஷ்ணன், துணைத் தலைவர் தேர்தலுக்கும் தோழர் ராமதாஸ் பெயரையும் முன்மொழிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸ் கட்சித் தலைவர் முன்மொழிந்து இருந்தும் [illegible] ராமதாஸ் அவர்கள் தோற்றுப்போய் இருக்கிறார்.

துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்னாள் மேயர் காலஞ் சென்ற டி. சுந்தரராவ் (நாயுடு) அவர்கள் திருமகன் வேணுகோபாலராவ் அவர்கள் பெயரை காங்கிரஸ் கட்சியைச்சேராத ஒருவர் முன்மொழிந்தார். வாக்கெடுப்பு நடந்தது. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களே பெரும்பான்மை உறுப்பினர்களாக இருந்தும் கூட, காங்கிரஸ் அபேட்சகருக்கு 36 வாக்குகளும், எதிர்த்து நின்ற அரசியல் கட்சி சார்பற்றவருக்கு 38 வாக்குகளும் கிடைத்தன. காங்கிரஸ் கட்சி அபேட்சகரான தோழர் ராமதாஸ் தோற்று, மற்றவர் வெற்றி பெற்று இருக்கிறார்.

ஏன் இந்தத் தோல்வி காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பது ஆராயத்தக்கது. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களில் சிலர் வேலி தாண்டி இருக்கிறார்கள் என்பது வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது. ஏன், வேலி தாண்டினார்கள் என்ற கேள்வி நியாயமாக எழுகிறது.

கட்சியை அலட்சியப்படுத்தி சில காங்கிரஸ் உறுப்பினர்கள் நடந்துகொண்டதற்கும், சென்னை மாநில அரசியலில் ஆச்சாரியார் அவர்களுக்கும்—காமராஜர் அவர்களுக்கும் உள்ள அதிகாரத் தகராறுக்கும் பெரிய அளவில் தொடர்பு இருக்கிறது என்பதுதான் நமது கருத்து. உள்ளூர ஆச்சாரியார் கோஷ்டியைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர்கள்தான், சென்னை நகராட்சித் துணைத்தலைவர் தேர்தலில் தோழர் ராமதாஸ் அவர்களைத் தோற்கடிப்பதின் மூலம், தோழர் காமராஜர் அவர்களுக்குத் தோல்வியை உண்டாக்கி இருக்கிறார்கள் என்பது உண்மையிலும் உண்மையாகும்.

ஆச்சாரியார் கோஷ்டிக்கு, காங்கிரஸ் கட்சியின் கண்ணியத்தில அக்கறை கிடையாது என்பதையும், காங்கிரஸ் கண்ணியத்தைப் பலி கொடுத்தாவது, ஆச்சாரியாரின் அதிகாரத்தைப் பலப்படுத்துவதுதான் இந்தக் கும்பலின் உள் எண்ணம் என்பதையும், காமராஜர் குழு சுட்டிக்காட்டி தனக்கு ஆதிக்கம் தேடக் கிளம்பும் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ளார். நமக்கு இதுபற்றிக் கவலையும் கிடையாது.

ஆச்சாரியார்—காமராசர் பிணக்கு எப்படியாவது இருக்கட்டும்; தியாகத்துக்கு மதிப்பும், சிறந்த ஊழியர்களுக்கு மரியாதையும், ஏழைகளுக்கு நல்வரவும் கூறுகின்ற நல்லியல்பு காங்கிரஸ் கட்சித் தலைவர் என்று சொல்லிக் கொள்ளுகிற பேர்வழிகளிடம் கிடையாது என்பதை, தோழர் ரா[illegible] தமின் தோல்வி [illegible] விளக்கமாகக் காட்டிவிட்டது.

இது, காமராஜ் தோல்வி என்பது எவ்வளவு உண்மையோ, அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு உண்மை நிரம்பியதாகும் காங்கிரசிலே ஏழைகளுக்கும், ஊழியர்களுக்கும் இனி இடமில்லை என்பது. இந்த மகத்தான உண்மை[illegible] எடுத்துக் கூறி இதை முடிக்கிறோம்.

புத்தர் கோட்பாடு
இலங்கையில் இன்றும் காப்பாற்றப்படுகிறது
பிறந்த நாட்டிலோ அதற்குக் குழி தோண்டப்பட்டுவிட்டது

சிதம்பரம், நவ. 16—

அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர்களால், சிலோன் முதலமைச்சர் பிரதமரான டட்லி சேனநாயகாவுக்கு வரவேற்பளிக்கப்பட்டது. அப்பொழுது அவர் கூறியதாவது:—

"புத்தரின் கோட்பாட்டை, அசோகரின் மகன் முதல் முதலாக சிலோனுக்குக் கொணர்ந்தார். அதன் புனிதம் கெடாமல் கடந்த 2000 ஆண்டுகளாக சிலோன் காப்பாற்றி வருகிறது. புத்தர் பிறந்த நாட்[illegible]வருடைய தத்துவங்கள் [illegible] மறக்கப்பட்டு வி[illegible] கை யில், இன்றும் சிலோனில் அது பாதுகாக்கப்பட்டு வ[illegible] வது குறிப்பிடத்தக்கது."

போலி ம[illegible] பில்லைகள்
தயாரிக்கும் [illegible] கூட்டம் [illegible] பட்டது
அதற்கான [illegible] கருவிகளையும் போலீஸ் கை[illegible] பற்றியது

[illegible] நவ. 18—

மருந்து மாத்திரை பில்லைகளைத் தயாரிக்கும் அச்சு உருவம் அமைக்கப்பட்டக் கருவியுடன், சிலோராமைசின் எம்பி 693, சல்பாடையசின் போன்ற மருந்து மாத்திரைகளைத் தயாரிக்கும் இடத்தை கல்கத்தா போலீஸ் [illegible] பிடித்தது. இரு நபர்கள் [illegible]து செய்யப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற கள்ளத் தயாரிப்பு இடங்கள் வேறு பல நகரத்தில இருக்கின்றன என்று ஒரு போலீஸ் அதிகாரி கூறினார். இந்தப் போலி மாத்திரைகள் வெறும் சீமைச் சுண்ணாம்பால் தயாரிக்கப்படுகின்றனவாம்.

கல்லூரி பேராசிரியர்கள் மீது ம. பி. சர்க்கார் பாய்ச்சல்!
அரசியலில் பங்கு கொள்வதற்கு தடை!

சிந்தவாரா, நவ. 18—

"கல்லூரி மாணவர்கள் அரசியலில் அதிகமாகப் பங்கு கொள்ளுகிறார்கள் என்றும், அதைக் கட்டுப்படுத்த வேண்டுமானால், அவர்களுக்குப் போதிக்கும் பேராசிரியர்களையும் அரசியலில் பங்கு கொள்ளாமல் தடுத்தல்தான், அது சாத்தியமாகும் என்றும் மத்தியப் பிரதேச காங்கிரஸ் சர்க்கார் கருதுகிறதாம்.

மத்திய பிரதேச காங்கிரஸ் சர்க்கார், கல்லூரி பேராசிரியர்கள் அரசியலில் பங்குகொள்ளக் கூடாது என்று உத்தரவு ஒன்றைப் பிறப்பித்து இருக்கிறது.

இந்த சர்க்கார் உத்தரவை மீறுகிற பேராசிரியர்களைக் கொண்ட கல்லூரிகளுக்கு உதவித் தொகை கொடுக்கப்படுவது நிறுத்தப்படும் என்றும் சர்க்கார் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

ஏற்கனவே மற்றப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இது போன்ற தடை விதித்திருப்பதாகவும், அதனுடைய தொடர்ச்சிதான் இது என்றும் சொல்லப்படுகிறது.

சிறை மீண்ட தோழர்கட்கு வரவேற்பு

சென்னை, நவ. 18—

மீர்சாகிப்பேட்டையில், 13—10—53ல், 43-வது தி. மு. கழகச் சார்பில், தடையை மீறி கூட்டம் நடத்தியதற்காக 13—10—53ல், 19 நாள் சிறைத் தண்டனை ஏற்ற தோழர்கள் டி. ஏ. வெங்கடாசலம், டி. ஏ. துரை, வி. கன்னியப்பன், சி. பூபதி ஆகியோர் சிறையிலிருந்து இன்று விடுதலை பெற்றனர்.

43-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கள் சிறை வாயிலில் குழுமியிருந்து, சிறை மீண்டோரை வரவேற்று, மலர்மாலைகள் அணிவித்தனர்.

பாக். — யு. எஸ்.
உறவுபற்றி ஐசன்ஹோவர்

வாஷிங்டன், நவ: 18—

பாகிஸ்தானுடன் தன் உறவுகளை அமெரிக்கா வளர்ப்பதில் பாகிஸ்தானுக்கு அருகில் உள்ள நாடுகளில் அமைதியின்மை அல்லது ஆத்திரம் ஏற்படுத்தக் கூடிய எதையும் செய்துவிடலாகாதென்று ஜனாதிபதி ஐசன்ஹோவர் இன்று கூறினார்.

அமெரிக்க இராணுவ உதவியில் பாகிஸ்தான் அக்கறை கொள்ளுமென்றும், அமெரிக்க படைகளுக்கு பாக்: தளங்கள் கொடுப்பது சாத்தியமே என்றும் செய்திகள் வெளியானது பற்றி நிருபர் ஜனாதிபதியிடம் கேட்டனர்:

தற்போது பாக்: கவர்னர்-ஜெனரலை தான் சந்தித்தபோது, இராணுவ தளங்கள் பற்றி தாங்கள் உரையாடவில்லை யென்றும் இந்தியாவுடன் நட்புடன் இருக்க அமெரிக்கா விரும்புவதாகவும் அவர் சொன்னார்:

இந்தியா வ[illegible] ஜகனுக்கு மறுப்பு

லண்டன், நவ: 17—

பிரிட்டிஷ் கயானா தலைவர்களான டாக்டர் ஜகனும், பர்ன்ஹாமும் ஏர்ரோ வழியாக இந்தியா செல்ல அனுமதி அளிப்பதற்கு, பிரிட்டிஷ் பாஸ்போர்ட் காரியாலயம் மறுத்துவிட்டது.

பார்லிமெண்டில் தொழிற் கட்சி மெம்பரான பென்னர் பிராக்வே இத்தகவலை இன்று வெளியிட்டார்

அனுமதி அளிக்கும் விஷயத்தை காலனி இலாகா கவனிக்க வேண்டுமென்றும், அதை பிரிட்டிஷ் கயானா சர்க்காருக்குக் காலனி இலாகா அனுப்பக்கூடுமென்றும் பாஸ்போர்ட் காரியாலயம் கூறிவிட்டது.

சென்னையில் டிராம்
தொழிற் சங்கக் குழு முயற்சி

சென்னை, நவ. 18—

பொது மக்கள், டிராம்வே தொழிலாளர்கள் ஆகியோரிடமிருந்து பணம் திரட்டி, நகரில் மீண்டும் டிராமை ஓட்ட நகர தொழிற் சங்கக் கவுன்சில் முடிவு செய்துள்ளது.

கவுன்சில் கூட்டத்திற்கு தோழர் டி. எஸ். ராமானுசம் தலைமை வகித்தார்.

இதற்காக மத்திய சர்க்காரிடமிருந்து உதவிநிதி பெற ஏழு பேர்களடங்கிய கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது.

மீண்டும் டிராம்களை ஓடவைக்கும் முயற்சிக்குமக்களிடமிருந்து தலா பத்து ரூபாய் வீதம் வசூலிப்பதென முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு பணம் கொடுப்பவர்கள கம்பெனி பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தாக்குதல் ஏற்பட்டால்......

லண்டன், நவ. 17—

அணுகுண்டுத் தாக்குதல்கள் ஏற்பட்டால், பிரிட்டனில் பெரும யுத்தக் கப்பல்கள், அவைகளை எதிர்க்கும் வல்லமை பொருந்தியதாக உள்ளன என்று கடற்படை நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

★

முன் தொடர்ச்சி ரூ	2872-10—2
திருமங்கலம் தி மு கழக பொதுக்கூட்ட வசூல்	6—0—0
பொள்ளாச்சி வி தங்கையா	5—0—0
மரக்காணம் சுப்பம்மாள்	2—0—0
,, இமயம்	1—0—0
,, வேலழகன்	1—0—0
,, சி ராமசாமி	1—0—0
,, எம். முத்து	1—0—0
,, தி. மு. கழகம்	1—0—0
செம்பலம் ஜே தங்கவேலு	1—0—0
திருத்துறைபூண்டி பியூ எலக்ட்ரிக் ரைஸ் மில்	1—0—0
,, ஜி. கோவிந்தராசு	1—0—0
,, என். வடுகநாதன்	1—0—0
,, எம் காசிமுத்து, பிச்சக்கண்ணு, மணியன், அருள்வள்ளோன், ஒரு அனுதாபி ஆகியோர்	2—8—0
கள்ளிக்குடி பட்டம்மாள், கிருஷ்ண சாமி, சிவசாமி, சுப்ரமணியம், துரைசாமி ஆகியோர்	1-12—0
சென்னை, பின்னி மீச் என்ஜினீரிங் கம்பெனித் தோழர்கள் :— ராசு, குப்புசாமி, ஞானப்பிரகாசம், சுப்ரமணி, அப்துல் அமீத், கோவிந்தன், தாஸ், நடராசன், லாசரஸ், சீனிவாசன், ராமு, ராஜு, நடராசன், எத்திராசன், சந்தானம், முருகேசன், தேவராசன், அமீத், கோபால், கோபாலகிருஷ்ணன், பெரியபிச்சை, கதிர்வேலு, ஸ்ரீராமு, எம். கே. மதுரை, சுந்தரபாபு, சி. ஆர். மணி, ராமகிருஷ்ணன், தனபாலன், முருகேசன், ஜூசை, ராமச்சந்திரன், சுப்ரமணியன், பாலசுந்தரம், கோபால், கிருஷ்ணன், பத்மநாபன், பெரியநாயகம், பரசுராமன், கோவிந்தன், ராதா, சுப்ரமணியன், ஜூசைராஜ், அரசு, ஜான், முனுசாமி, கே முனுசாமி, எத்திராசன், ராஜா, வாசுதேவன், துரைராஜ், கைலாசம், மணவாளன், ஜெயராமன், கோவிந்தசாமி, துரைராஜ், எம். முரளி ஆகியோர்	18—0—0
சென்னை தியாகராயர் கல்லூரி :—	
அ. சிவப்பிரகாசம்	1—0—0
பெ. பூச்சக்கரவர்த்தி	1—0—0
கொ. பெ. சம்பந்தன், சந்தானம், கோபாலகிருஷ்ணன், குலாம் காதர், செங்கல்வராயன், ராமச்சந்திரன், காசிபதி, நித்தியானந்தம், திருநாவுக்கரசு, பாலசுப்ரமணியன், பழனிவேலு, செல்வசேகர், கோ. த. பழனி, சுந்தரம் ஆகியோர்	6—4—0
தென்பாலை தி மு. கழகம்	5—0—0
அருப்புக்கோட்டை சவுந்தரபாண்டியனார் நினைவு படிப்பகம்	4—0—0
ஆத்தூர் கே. பழனிவேல்	5—0—0
,, எஸ். பெரியசாமி படையாச்சி	5—0—0
,, எல். பி என். விஸ்வநாதன்	5—0—0
,, எஸ். சுப்பராய பிள்ளை	5—0—0
,, டி. ஏ ராமசாமி பிள்ளை அண் பிரதர்ஸ்	5—0—0
,, நிர்மல் ஜெனரல் ஸ்டோர்ஸ்	3—0—0
,, பி குஞ்சப்ப செட்டி அண் சன்	3—0—0
வேலப்பாடி—வேலூர் வி. எம். பாலகிருஷ்ணன்	1—0—0
அருப்புக்கோட்டை பி எஸ். ராமசாமி	1—0—0
புது டெல்லி ராணுவ முகாமைச் சேர்ந்த ஒரு தோழர்	5—0—0
சோபனபுரம் எஸ். ஆர். நடராசன்	2—0—0
,, ராமராஜு	2—0—0
,, அரங்கண்ணல்	1—0—0
,, எஸ் கே. கோபால்	1—0—0
,, சிவஞானம்	1—0—6
,, அப்துல் அஜீஸ்	1—0—0
,, எம்: ராசன்	1—0—0
,, என் டி. சீனிவாசன்	1—0—0
,, கோபாலகிருஷ்ண குப்தா	1—0—0
,, எம் சுப்ரமணியம்	1—0—0
,, அப்துல் காதர், அப்துல் ரஜாக், அருணாசலம், நல்லப்பன், சபாபதி, ராஜாமணி, முகமது அலி, ஆறுமுகம், கிருஷ்ணையா, பத்மநாபன், பிச்சியம்மாள், அருணாசலம் ஆகியோர்	4-15—6
சென்னை, மவுண்ட் ரோட் உடுப்பி கிருஷ்ண விலாஸ் ஓட்டல் தொழிலாளர்கள் :—	
எஸ். நடராசன்	2—0—0
ஆர். கேசவன்	1—0—0
ஆர். அண்ணாமலை	1—0—0
சி. முத்து	1—0—0
டி. ஆனந்தன்	1—0—0
கே முனுசாமி	1—0—0
பி துரைசாமி	1—0—0
பி. பெரியசாமி	1—0—0
கே. சிதம்பரம்	1—0—0
எம். சுப்ரமணி	1 - 0—0
கே. கந்தசாமி	1—0—0
கே. மணி	1—0—0
எம். துரைசாமி	1—8 - 0
எஸ். வி. கனகசபாபதி	1—4—0
எம். மாணிக்கம்	1—0—0
சென்னை 29-வது வட்ட தோழர்கள்:—	
அசோகன்	1—0—0
தமிழ்ப்பித்தன்	2—0—0
மு சங்கர்	3—0—0
க. பிரமநாயகம்	1—0—0
க. த. தி. அரசு	1—0—0
ந. பாக்கியம்	1—8—0
அரசப்பா	1—0—0
அ. பொ. அரசு	2—0—0
எம். ஏ. கரிகாலன்	1—0—0
சி. என். நாகலிங்கம்	1—0—0
கா. ல. அறிவழகன்	1—1—1
ஏ. என். சி பாபு	2—0—0
மணி	1—0—0
சந்திரன்	2—0—0
எஸ். ஏ. மஜீத்	1—0—0
தி. ந. ரங்கநாதன்	1—0—0
ப. க. வேணுகோபால்	1—8—0
சி. நடராசன்	1—0—0
தி. சண்முகம்	1—1—1
டி. ஆர். லோகநாதன்	[illegible]—0—0
அண்ணாமலை, துரைக்கண்ணு, உயிர்மணி, முருகேசன், தங்கவேல், கணேசன், கந்தன், வெங்கடசாமி, வெங்கடேசன், சண்முகம், சுப்ரமணியன், நாதன், ரங்கசாமி, சந்திரன், சீனிவாசன், சுந்தர், அப்துல் வகாப், ஜெகநாதன், நீலகண்டன், கந்தசாமி, பாலகிருஷ்ணன், சண்முகம், ராமையா, கணேஷ் ஆகியோர்	8-10—1
தென் பகுதி புகைவண்டித் தொடர் தலைமை நிலைய அனுதாபிகள்	42—8—0
வேலூர் தி மு. க. அன்புமுகம்	1—0—0
பொள்ளாச்சி கே. வி. வீராசாமி	1—0—0
சாம்பட்டி தி. மு. கழகம்	3—0—0
பரோடா தி மு. கழகம் தோழர் கனகமணி மூலம்	7—0—0
தூத்துக்குடி ஆ. மாரியப்பன்	2—0—0
,, என். பாண்டியன், சங்கரதாஸ், என். எ. சாமி, பொன்னுசாமி, சங்கரன், ரத்தினசாமி, நல்லதம்பி, முத்தையா, வன்னியராசன், புகழேந்தி, தியாகராசன், ரத்தின சபாபதி, காளியப்பன் முதலியோர்	6—8—0
கரூர் 19-வது வார்டு தி மு. கழக பொதுக்கூட்ட உண்டி வசூல், வி. சிவப்பிரகாசம் மூலம்	10—0—0
சத்தை புதுப்பாளையம் தி. மு. கழகம்	16—0—0
கோவில்பட்டி தி மு. கழகம், பொன்னுசாமி, சின்னசாமி, சேர்மன், சாமி, மாரியப்பன், தமிழரசன் ஆகியோரால் உண்டியல் மூலம் வசூலித்தது	48—8—0
தோழர் என். எஸ். இளங்கோ அவர்களின் பம்பாய்ச் சுற்றுப் பயணத்தில் வசூலானது :—	
பம்பாய் — மதுங்கா தி. மு. கழக பொதுக்கூட்ட வசூல்	23—0—0
,, தாராவி	25-10—9
,, பாண்டுப்	25—4—0
,, சயான்	9—0—0
,, கொலாபா	6-10—0
,, தாராவி சவுந்திரபாண்டியனார் படிப்பகம் வசூல்	25—5—3
,, அந்தேரி, கோலிவங்கரி தி.மு. கழகக் கிளை வசூல்	4—7—0
ஆக மொத்தம் ரூ.	3298—7—5

காங்கிரஸ் துணை அமைச்சர் நேர் அலுவலர் மீது லஞ்சக் குற்றம்

ஒரு ஆண்டு காவல் தண்டனையை நீதிபதி வழங்கினார்

பம்பாய், நவ. 19—

பம்பாய் காங்கிரஸ் சர்க்காரில், சிவில் சப்ளைஸ் துணை அமைச்சரின் ஓர் அலுவலராகப் பணி புரிந்துவந்த பிரபாகர் விட்டல் கடேகார் என்ற அதிகாரி, ஒரு காட்டுக்கரி வியாபாரியிடம் ரூ. 300 லஞ்சம் வாங்கினதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில், நீதிபதி வி. ஆர். ஷெராப், குற்றம் செய்திருப்பது மெய்யெனக் கண்டு, அதிகாரிக்கு ஒரு வருஷக் கடின காவல் தண்டனை அளித்துள்ளார்.

பேட் முகமத் என்ற காட்டுக் கரி மொத்த வியாபாரி ஏதோ ஒழுங்கீனமாக வியாபாரம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, அவருடைய வியாபார உத்திரவு 3 மாதத்திற்கு ரத்து செய்யப்பட்டது. இது பற்றி துணைமந்திரியிடம் அந்த வியாபாரி அப்பீல் செய்து கொண்டார். விசாரணையும் நடைபெற்றது.

விசாரணை முடிந்து மந்திரி அலுவலகத்திலிருந்து வியாபாரி வெளியில் வரும் பொழுது, வியாபாரியை மந்திரியின் நேர் அலுவலர் சந்தித்து ரூ. 500 லஞ்சமாகக் கொடுத்தால் அவருடைய வியாபார ரத்து உத்திரவு ரத்து செய்யப்படும் என்று கூறினர். பேரம் நடந்தது: ரூ. 300 தருவது என்று முடிவாயிற்று.

குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நோட்டுகளை வியாபாரி லஞ்சமாகக் கொடுத்தார் சர்க்கார் அதிகாரியிடம் ஒழுங்கீனத்தைக் கண்காணிக்கும் [illegible]ங்குப் படையினர் கையும் [illegible]புமாக லஞ்சம் வாங்கிய [illegible]ரியைப் பிடித்துக் கொண்[illegible].

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

ஐயோ! பிரகலாதர்களே!

"நாரதர் உபதேசத்தால், கருவிலிருந்த பிரகலாதன் எவ்வாறு நல்லறிவு பெற்றானோ, அதே மாதிரி, சுதந்திரம் வந்த பிறகு காங்கிரஸ் தலைவர்களின் உபதேசத்தால் குழந்தைகள் நல்ல புத்திசாலிகளாக ஆகிவிட்டார்கள்."

—ராஜாராம் நாயுடு
19—11—53 'தினத் தந்தி'

* * *

"பிரகலாதனிடம், இரணியன், 'இரண்யா நமோ' என்று சொல்லச் சொன்னான்; ஆனால், பிரகலாதனோ, 'நாராயண நமோ' என்றான்; இதனால், நாட்டில் நாராயண பக்தி அதிகமாகி விட்டது. உண்மையாகவே ஆஸ்திகத்தை வளர்ப்பவர்கள், நாஸ்திகர்கள்தான்."

—சி. சுப்ரமணியம்
19—11—53 'தினத் தந்தி'

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

உங்களுக்குத் தெரியுமா?

சென்னை, நவ. 19—

தாய் மொழி மூலம் கல்வி [illegible]பாதிப்பது பற்றி ஐ. நா. கல்வி கலாசார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள தனிப் பிரசுரம் ஒன்று குறிப்பிடுவதாவது:—

ஒவ்வொரு [illegible]டும் இது பற்றிய பிரச்னை[illegible] [illegible]வ்வொரு மாதிரியுள்ளன. இ[illegible] வசிக்கும் 3,60,000,000 100 வகையான மொழி பேசுகின்றனர்; ஆனால், இவை வில் 14 மொழிகள்தான் பிரதேச மொழியாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

ஐரோப்பாவில் 50 பிரதான மொழிகள் உள்ளன.

தென் அமெரிக்காவில் 358 வகையான மொழிகள் பேசப் படுகின்றன.

சி. ஆர். கோபுரம்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்பதை, சட்டசபை விவாதிக்கட்டும்; நல்லதல்ல வென்று சொன்னால், எங்களை வீட்டிற்கு அனுப்பட்டும்."

"மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கலப்பு மணம் இவைகளில் ஆச்சாரியார் தீவிரமாக ஈடுபட்டு காரியமாற்றியுள்ளார். அவரை வகுப்புவாதியென்பது தவறு. அவருடைய ஆட்சியில் பிராமணர் அல்லாதார்தான் பல நன்மைகளை அடைந்திருக்கின்றனர். தனிப்பட்டவர்களுக்கு எந்தச் சலுகையும் அவர் அளிக்கவில்லை: திறமையைப் பார்த்தே அவர் எதையும் செய்கிறார்," என்றார்.

கடைசியாகப் பேசிய சோமயாஜுலு, கூறியதாவது:—

"ஆச்சாரியார், ஒரு கோபுரம் போன்றவர். அதன்மேல் கருமேகங்கள் குவிகின்றன. நட்சத்திரம் போன்ற பெரிய மனிதர்களெல்லாம், ஆச்சாரியாரைப் பாராட்டுகிறார்கள். ஆச்சாரியாரை எதிர்ப்பவர்கள், அவரை வகுப்புவாதி என்கிறார்கள் இப்படி சண்டை போடுகிறவர்களை காங்கிரசை விட்டே வெளியேற்ற வேண்டும்," என்றார்.

பத்திரிகை ஆ[illegible]ர்கள் அறுவர் கைது

ஜலந்தர், நவ. 18—

'பாரத்' தினசரியைச் சேர்ந்த வீரேந்திரா, தீனநாத் வர்மா, 'அஜீத்' தினசரி ஆசிரியர் சர்தார் சாதுசிங் ஹம் திராலை, 'அகாலி பத்ரிகா' தினசரி ஆசிரியர் சியாணி சாதிசிங், 'பிரபாத்' தினசரி ஆசிரியர் நானக் சந்த் நாஸ, "அகாலி" ஆசிரியர் சர்தார பக்கிஸிங் ஆகியோர் இன்று கைது செய்யப்பட்டனர்.

ஆட்சேபகரமான செய்திகள், கட்டுரைகள் பிரசுரித்ததாக அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மற்றும் சில பத்திரிகை ஆசிரியர்கள் மீதும் கைது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பிரசங்கங்களில் ஆட்சேபகரமான விஷயங்களை வெளியிட்டதாக சஞ்சய் எம். எல். ஏ. ஜக்ஜித் ஆனந்த் இருவரும் இன்று கைது செய்யப்பட்டார்கள்.

தூத்துக்குடி வழக்கு நிதி சிறப்புக் காட்சி

பட உலகில் புரட்சியை உண்டாக்கிய, தோழர் மு கருணாநிதி தீட்டிய 'பராசக்தி' காட்சி, 22—11—53 ஞாயிறு காலை 10 மணிக்கு, சென்னை கினிமா [illegible] திரையிடப்படும். இதில் நடித்துள்ள முக்கிய நடிகர்கள் மேடையில் தோன்றுவர்.

—தி மு. கழகம்,
[illegible] வட்டம்

கல்வி ஓடையில்......!

நியூயார்க், நவ 19—

அமெரிக்க சர்வ கலாசாலைகளில இப்போது, மாணவர்கள் எண்ணிக்கை ஒரு ஆண்டுக்கு முன்னிருந்ததைவிட, அதிகம் பெருகியுள்ளது. இப்போது 22 15,000 பேர் படிக்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு, முன்பு 21,43,000 பேர் படித்தார்கள்.

பாருலேகர் குழுவின் அறிக்கை

சென்னை, நவ. 19—

புதிய கல்வித் திட்டம் பற்றி பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட பாருலேகர் குழு கூடிய சீக்கிரத்தில், தன் அறிக்கையைச் சர்க்காருக்கு சமர்ப்பிக்கும்

இந்த அறிக்கை, ஆச்சாரியாரிடம் கல்வி டைரக்டர் திருமதி சீனிவாசனால் தரப்படும்.

'பத்து கட்டளைகள்'

லண்டன், நவ 19—

'பத்து கட்டளைகள்' என கிறிஸ்துவ மத சம்பந்தமான படத்தை மீண்டும் தயாரிக்க சிறந்த படாதிபதி ஸிஸில் பி. டி. மிலி இப்போது முன் வந்துள்ளார். மௌனப் படமாக இதை அவர் ஏற்கெனவே தயாரித்துள்ளார்.

தமிழகமெங்கும் தூத்துக்குடி வாரம்

★

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கைக்கிணங்க, 'தூத்துக்குடி வாரம்' கொண்டாடி, அந்தக் கூட்டத்தில், "தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கக் கோரியும், அதில் சம்பந்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யுமாறு சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றி அதை சென்னை முதல் அமைச்சர் ஆச்சாரியாருக்கு அனுப்பியும், தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் பெற்று; தூத்துக்குடி தோழர்களை விடுவிக்கக்கோரும் மனு ஒன்றை தயாரித்து, அதில் பொதுமக்களிடம் கையொப்பம் வாங்கி முதலமைச்சருக்கு அனுப்பியும் உள்ள கழகங்களின் பட்டியலும், நிகழ்ச்சியின் சுருக்கமும் கீழே தரப்பட்டுள்ளது. தீர்மானங்களும், கோரிக்கையும், கையொப்பத் தாளும் ஒரே நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டவையாதலால், தீர்மானங்களைத் தவிர்த்து, கூட்ட நிகழ்ச்சிகளை மட்டுமே பிரசுரித்துள்ளோம்.

திட்டக்குடி

12—11—53-ல், இளங்கோ மன்றத்தில் கூடிய தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் தோழர் ஏ. பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெத்தநாயக்கன்பாளையம்

8—11—53ல், தோழர் சலீம் ரஹிமான் தலைமையில் தூத்துக்குடி நாள் நடைபெற்றது. தோழர்கள்: எம். பி. சுப்பிரமணியம், எம். எல். ஏ. பழனி, அ. தமிழரசு ஆகியோர் பேசினர்.

அம்மாப்பேட்டை

8—11—53-ல், பதிப்பு கழகக் கட்டடத்தில், தோழர் சி. சி. சித்தையான் தலைமையில் தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள்: அன்புக்கரசு, கே. ஏ. நடராசன், எம். பி. சுப்பிரமணியம், பி. ஏ., எம். எல். ஏ. இ. ஆர். கிருஷ்ணன், ஏ. தமிழரசு, கே. என். மணி, கே. ஏ. வெங்கடாசலம் ஆகியோர் ஆச்சாரியாரின் சர்வாதிகாரப் போக்கையும், தூத்துக்குடி நிகழ்ச்சிகள் பற்றியும், வழக்கு நிதிக்கு பணம் உதவ வேண்டியதின் அவசியம் பற்றியும் விரிவுரையாற்றினர்.

புசிறி

8—11—53ல், [illegible] தி. மு. கழக [illegible] குழுவின் தூத்துக்குடி [illegible] நிறைவேற்றப்பட்டன.

முருகன்குடி

7—11—53ல, எ. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற தூத்துக்குடி நாள் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆவல்சூரண்டட்டி

8—11—53ல், தி. மு. கழகச் சார்பில், தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் தோழர் வெங்கிடசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தூத்துக்குடி நாள் பற்றி பல தோழர்கள் பேசினர்.

திருச்சி (20வது வட்டம்)

8—11—53ல, தி. மு. கழக செயற் குழு கூட்டத்தில் தூத்துக்குடி நாள் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காட்டுப்புத்தூர்

10—11—53ல், சலவை மைதானத்தில், தோழர் லெ. ஏம். சரவணம் தலைமையில் தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

செங்குன்றம்

8—11—53ல், தி. மு. கழகச் சார்பில் நடைபெற்றது. தூத்துக்குடி நாள் கூட்டத்திற்குத் தோழர் மா. தங்கப்பிரகாசம் தலைமை வகித்தார். தோழர்கள் க. சேரன், ப. குன்றக்குமார் ஆகியோர் பேசினர்.

புது ஆயக்குடி

11—11—53ல், தி. மு. கழக சார்பில், தூத்துக்குடி நாள் அறிக்கைக் கிணங்க, அரசியலாருக்குக் கையெழுத்து மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இராசிபுரம்

7—11—53ல், தோழர் பி. இளங்கண்ணன் தலைமையில் தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சிறுவர் சுப்ரமணியம், கே. வி. கே. இராமசாமி, ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., ஆகியோர் பேசினர்.

தண்டரை—பட்டாபிராம்

7—11—53ல், தி. மு. கழக நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ஜே. எஸ். மணி வையர் [illegible] செயலாளர் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் [illegible] தூத்துக்குடி நாள் பற்றிப் பேசினர்.

மம்சாபுரம்

10—11—53ல், இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம் மம்சாபுரம் கிளை தி. மு. கழகச் செயற் குழு, தோழர் கனிப்பன் தலைமையில் கூடியபோது, தூத்துக்குடி நாள் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மீஞ்சூர்

8—11—53ல். தோழர் பி. [illegible] தலைமையில் [illegible] உறுப்பினர் கூட்டத் [illegible] தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

[illegible]வனூர்

7—11—53ல், தி. மு. கழகச் சார்பில, தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் தோழர் பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது.

கோமாகுடி

4—11—53ல், தி. மு. கழகச் சார்பில, தூத்துக்குடி நாள் கூட்டம் தோழர் வ. ரத்தினம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள், எஸ். கலியபெருமாள், எஸ். தருமராசன், து. சமசிவாயம், சே. மாரிமுத்து, எஸ். பெரியசாமி ஆகியோர் பேசினர்.

சாத்தான்குளம்

7—11—53ல, தி. மு. கழகச் சார்பில், பெரியார் சதுக்கத்தில தோழர் வீ. காசி தலைமையில், தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. சோமசுந்தர, வின்சென்ட், பிரகாஷ் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பிள்ளாதுறை

10—11—53ல் தி மு. கழகச் சார்பில் தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் தோழர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம் ஏ. இராமசாமி, மு பெ. முத்துக்கருப்பன் ஆகியோர் பேசினர்.

எருமப்பட்டி

11—11—53ல், தி. மு. கழக சார்பில, தோழர்கள் சி. இராசா பாதர் தலைமையில், தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சரவணன் பேசினர்.

தேவபாண்டலம்

1—11—53ல், தி. மு. கழகச் சார்பில் தூத்துக்குடி நாள் கூட்டம் நடைபெற்றது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கன்னிவாடி

9—11—53ல், தி. மு கிளைக் கழக சார்பில், தோழர் சோலை பொன்னப்பர் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம், தோழர்கள் ராசசேகரன, முருகேசன் ஆகியோர் பேசினர்.

பிறையாறு

8—11—53ல், இரா. சந்திரசேகரவேலு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் ஏ. சாமிநாதம், என். தட்சிணாமூர்த்தி, எம் எச் எம். அபுபக்கர் ஆகியோர் பேசினர்.

சங்கரன்குளம்

7—11—53ல், ப[illegible] சமதானத்தில், தி. மு. கழகச் சார்பில், தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் தோழர் இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. தோழர் [illegible] மு. சிவப்பிரகாசம் [illegible] ஆகியோர் [illegible]

பரவை

8—11- [illegible] மு. கழக உறுப்பினர் [illegible] தோழர் ம. துரை [illegible] தலைமையில் நடைபெற்றது. அதுபோது தூத்துக்குடி [illegible] பற்றி தோழர்கள் [illegible] ப. அழகேசன் ஆகியோர் பேசினர்.

[illegible]பட்டு

7—11—53ல், தி. மு. கழகச் சார்பில் தோழர் வீ. திருமலை தலைமையில், தூத்துக்குடி நாள் கூட்டம் நடைபெற்றது. தோழர் கோ. ராமநாதன், ப. சி. ராமலிங்கம், சி. பார்த்தசாரதி ஆகியோர் பேசினர்.

புதுக்கோட்டை

8—11—53ல, கழகக் கட்டடத்தில், நகர தி. மு. கழக உறுப்பினர்கள், அனுதாபிகள், ஆதரவாளர்கள், கமிட்டி மெம்பர்கள் அடங்கிய தூத்துக்குடி நாள் கூட்டம் நடைபெற்றது. தோழர் க. ஞானமுத்து மற்றும் பல இயக்கத் தோழர்கள் பேசினர்.

கொளத்தூர்

12—11—53ல், தி மு. கழக சார்பில, தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்க பொதுமக்களின் கையெழுத்துக்கள் அடங்கிய மனு ஒன்று முதல் மந்திரியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

நெல்லிக்குப்பம்

8—11—53ல, தூத்துக்குடி நாள் தோழர் ஏ. பி சந்தர் தலைமையில நடைபெற்றது. தோழர்கள் ஆர். குப்புசாமி, அ. வெங்கடபதி, இரா. மதியழகன் ஆகியோர் பேசினர்.

தொளார்

8—11—53ல், தி. மு. கழக அலுவலகத்தின் முன்னிலையில தோழர் வ. சின்னதம்பி அவர்கள் தலைமையில, தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் சி சேரன், வே. பழனிச்சலவம், மு. ஆதிமூலம் ஆகியோர் பேசினர்.

உசிலம்பட்டி

5—11—53ல், தோழர் பி சிவங்காமி தலைமையில் கூடிய தி மு. கழக செயற் குழுவில், தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தஞ்சை

8—11—53ல், தோழர் ஏ வி. பதி கடையில், தோழர் டி சோமு தலைமையில் தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முக்கூடல்

8—11—53ல், தி. மு. கழக முன்புள்ள பாண்டியன் திடலில்,

சேலம் மாவட்ட வட்டக் குழுக்கள் தேர்தல்

சேலம் மாவட்ட, வட்டக் குழுக்கள் தேர்தல் அடியில் குறிப்பிட்டபடி நடைபெறும். வட்டத்தைச் சேர்ந்த நகரக் கிளை, சிற்றூர்க் கிளைச் செயலாளர்கள் வட்டக் குழுப் பிரதிநிதிகளாகத் தேர்தல் கூட்டத்தில் கலந்து கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கூட்டம் குறித்துள்ள தேதிகளில் மாலை 2 மணிக்கு நடைபெறும்.

21—11—53 :

திருச்செங்கோடு—கழக மனை

22—11—53 :

சேலம்—செவ்வாய்ப் பேட்டை கழக மனை

ஆத்தூர்—கழக மனை

கரூர்—கழக மனை

கிருஷ்ணகிரி—கழக மனை

ஓமலூர்—சலகண்டபுரம் கழக மனை

ராசிபுரம்—கழக மனை

நாமக்கல்—முரசபதி பங்களா

சிங்கை தோழர் க. கந்தசாமி தலைமையில பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் க. கந்தசாமி, எம் ஆர். கணேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தொடையூர்

4—11—53ல், தொடையூர், சிற்றூர் தி மு கழகச் சார்பில. தூத்துக்குடி வாரம் நடைபெற்றது. தோழர் சி. கந்தசாமி தலைமை வகித்தார். தோழர்கள் க. பாண்டியன, அப்பாவு முதலியோர் இயக்கப் பண் பாடினர். தோழர்கள் இரங்கசாமி, துரை. மதியாணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

குரும்பேரி

6—11—53ல், குரும்பேரி கிராமத்தில் தூத்துக்குடி நாள் கொண்டாடப்பட்டது. பஞ்சாயத்து போர்டு மெம்பர் தோழர் கே. எம். ரத்தினவேலு தலைமை தாங்கினார். தோழர்கள் சி ஆர். சாமிநாதன், மா. மாரப்பன் ஆகியோர் பேசினர்.

கொடுவாய்

5—11—53ல், தி. மு கழகக் கூட்டம் தோழர் எம். நடேசன கடையில் நடைபெற்றது. தோழர் கே. எஸ். இராசன் தலைமை வகித்தார். கருப்புக் கொடி நிகழ்ச்சியில் 15 நாள் சிறை சென்று திரும்பிய தோழர் கே. பி ராமசாமியை தோழர்கள் பாராட்டிப் பேசினர். தேநீர் விருந்தளிக்கப்பட்டது, தூத்துக்குடி நாள் கொண்டாடப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாமக்கல்

8—11—53ல், இவ்வூர் திரு வி. க. பாறையில, தோழர் சிவஞானம தலைமையில, தூத்துக்குடி தினம கொண்டாடப்பட்டது. அதுசமயம், தோழர்கள் ஏ. ஆர். கிருஷ்ணன, சிறுவர் சுப்ரமணியம, எச். வி. சீனிவாசன், மாயனூர் சரவணன் ஆகியோர் பேசினர். பல தீர்மானங்கள் நிறைவேறின.

கோவில்பட்டி

8—11—53ல், தி. மு. கழகச் சார்பில், தூத்துக்குடி வாரப் பொதுக்கூட்டம் தோழர் சம்பிரசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வசனப்பித்தன, எஸ கலிங்கன், டபள்யூ டி. துரைசாமி, மு அருணசலம, நடராசன் ஆகியோர் பேசினர். கூட்டத்தில், சதிவழக்கு நிதிக்கு உண்டியல்பிரிக்கப்பட்ட தொகை 5—11—0 தலைமை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

புதுப்பாளையம் :

20—11—53 வெள்ளி மாலை

தலைவர் : ஜி. பி சோமசுந்தரம்

பேசுவோர் :

என். எஸ். இளங்கோ,

சிறுவர்-சுப்ரமணியம்,

கே. வி கே. இராமசாமி,

★

மதுராந்தகம் :

21—11—53 சனி மாலை

பேசுவோர் :

டி. வி. நாராயணசாமி,

தோழியர்கள் :

பூங்கோதை,

அருண்மொழி,

★

சென்னை :

21—11—53 சனி மாலை

தலைவர் : எஸ். சுந்தரம்

பேசுவோர் :

நாஞ்சில் - கி மனோகரன்,

வி. எஸ். கோவிந்தராசன்,

வி இளஞ்செழியன்,

தோழியர் அலமேலு அப்பாதுரை,

இடம் : இராயப்பேட்டை அம்மன் கோவில் திடலில்.

★

இலக்குமணபுரி :

(பெங்களூர்)

22—11—53 ஞாயிறு மாலை

தலைவர் : எ. ல. வி. பதி

பேசுவோர் :

சி பி. சிற்றரசு,

வே ஆ. தாமோதரன்,

★

ஏகாம்பரகுப்பம் :

20—11—53 வெள்ளி மாலை

தலைவர் : என். ஏ. ரசீத்

பேசுவோர் :

ஏ கோவிந்தசாமி, எம் எல். ஏ.

காஞ்சி - கலியாணசுந்தரம்,

புலவர் ப. நக்கீரன்த்தினம்

★★★★★★★★★★★

என். எஸ். இளங்கோ சுற்றுப் பயணம்

நவ 20 : புதுப்பாளையம் (ராசிபுரம்)

21 : திருச்செங்கோடு

22 : எடப்பாடி

23 : கிருஷ்ணகிரி

25 : திருமால்பூர்

29 : செங்கற்பட்டு

★

தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி சுற்றுப் பயணம்

நவ. 21 : ஆரணி

22 : போளூர்

23 : ஆற்காடு

24 : செய்யூர்

25 : அம்மனூர்

26 : அரக்கோணம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, ஜார்ஜ் டவுன் [illegible] தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.